ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 2023.11.24

**நாணயக்கொள்கை மீளாய்வு: இல. 08 - 2023 நவெம்பர்**

**இலங்கை மத்திய வங்கி கொள்கை வட்டி வீதங்களை மேலும் குறைக்கின்றது**

*இலங்கை மத்திய வங்கியின் நாணயக்கொள்கைச் சபையானது 2023 நவெம்பர் 23ஆம் நாளன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 9.00 சதவீதத்திற்கும் 10.00 சதவீதத்திற்கும் 100 அடிப்படைப் புள்ளிகளினால் குறைப்பதற்குத் தீர்மானித்தது. உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதாரத்தின் தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற அபிவிருத்திகளின் உன்னிப்பான பகுப்பாய்வொன்றினைத் தொடர்ந்து, நடுத்தர காலத்தில் பணவீக்கத்தினை இலக்கிடப்பட்ட 5 சதவீத மட்டத்தில் அடைந்து பேணுகின்ற வேளையில் பொருளாதாரம் உள்ளார்ந்த ஆற்றல்வாய்ந்த மட்டத்தினை அடைந்து உறுதிநிலைப்படுத்தப்படுவதனை இயலுமைப்படுத்தும் நோக்குடன் சபை இத்தீர்மானத்தினை மேற்கொண்டது. உள்நாட்டு மற்றும் உலகளாவிய ரீதியில் எதிர்பார்க்கப்படுகின்ற அபிவிருத்திகளிலிருந்து தோற்றம்பெறுகின்ற நிரம்பல் பக்க காரணிகளின் காரணமாக குறுங்காலத்தில் பணவீக்க எறிவுகளுக்கான சாத்தியமான மேல்நோக்கிய இடர்நேர்வுகளைச் சபை கருத்தில் கொண்டது. இருப்பினும், பொது மக்களின் பணவீக்க எதிர்பார்க்கைகள் தொடர்ந்தும் நிலைநிறுத்தப்பட்டுள்ளமையினாலும் குறுங்காலத்திலிருந்து நடுத்தர காலத்திற்குப் பொருளாதார நடவடிக்கையானது எதிர்பார்க்கப்படுகின்ற தரநியமங்களிலும் பார்க்க தொடர்ந்தும் தாழ்வாகக் காணப்படுமென எறிவுசெய்யப்பட்டுள்ளமையினாலும் அத்தகைய குறுங்கால இடர்நேர்வுகள் நடுத்தர கால பணவீக்கத் தோற்றப்பாட்டினைப் பெருமளவு மாற்றியமைக்காதென சபை கருதியது. மேலும், 2023 யூனிலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற நாணயக்கொள்கை வழிமுறைகளுடன் இணைந்து கொள்கை வட்டி வீதங்களின் இக்குறைவுடன் நடுத்தர காலத்தில் பணவீக்கத்தினை உறுதிநிலைப்படுத்துவதற்கான போதியளவிலான நாணயத் தளர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சபை கருதியது. ஆதலால், சந்தை வட்டி வீதங்களுக்குக் குறிப்பாக, கடன்வழங்கல் வீதங்களுக்கான நாணயத் தளர்வடைதல் வழிமுறைகள் நிதியியல் நிறுவனங்களின் மூலம் விரைவாகவும் முழுமையாகவும் ஊடுகடத்தப்படுவதுடன் அதன்மூலம் எதிர்வருகின்ற காலப்பகுதியில் சந்தை வட்டி வீதங்களின் இயல்புநிலைக்குத் திரும்பலினை துரிதப்படுத்துவதற்கான தேவையினை நாணயக்கொள்கைச் சபை வலியுறுத்தியது.*

முதன்மைப் பணவீக்கம் தொடர்ந்தும் தாழ்ந்தளவில் காணப்படுகின்றமையானது மெதுவடைந்த கேள்வி நிலைமைகளைப் பிரதிபலிக்கின்றது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100) ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்படுகின்ற முதன்மைப் பணவீக்கமானது 2023 செத்தெம்பரில் பதிவுசெய்யப்பட்ட 1.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2023 ஒத்தோபரில் 1.5 சதவீதமாகப் பதிவுசெய்யப்பட்டது. உணவுப் பணவீக்கமானது 2023 ஒத்தோபரில் தொடர்ச்சியாக நான்காவது மாதமாக தொடர்ந்தும் எதிர்மறையாகக் (ஆண்டிற்கு ஆண்டு) காணப்பட்டது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100) அடிப்படையிலமைந்த முதன்மைப் பணவீக்கமானது (ஆண்டிற்கு ஆண்டு) 2023 செத்தெம்பரில் பதிவுசெய்யப்பட்ட 0.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2023 ஒத்தோபரில் 1.0 சதவீதமாகப்

பதிவுசெய்யப்பட்டது. பொருளாதாரத்தின் உள்ளார்ந்த கேள்வி அழுத்தங்களைப் பிரதிபலிக்கின்ற கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் ஆகிய இரண்டினதும் அடிப்படையிலமைந்த மையப் பணவீக்கமானது 2023 ஒத்தோபரில் மேலும் மிதமடைந்தமையானது பொருளாதாரத்தின் மெதுவடைந்த கேள்வி அழுத்தங்களைப் பிரதிபலித்தது. 2024 சனவரி மாதத்திலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள பெறுமதி சேர் வரிக்கான மாற்றங்களினால் முக்கியமாக உந்தப்பட்டு பணவீக்கத்தில் ஒரே தடவையிலான மேல்நோக்கிய அசைவொன்று குறுங்காலத்தில் ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மெதுவடைந்த உள்ளார்ந்த கேள்வி அழுத்தங்களின் காரணமாக வரி வழிமுறைகளினதும் ஏனைய அபிவிருத்திகளினதும் கசிவுத் தாக்கங்கள் குறைவடையக்கூடுமென்பதனால் பணவீக்கத்தில் ஏற்பட்டுள்ள இவ்வதிகரிப்பானது தற்காலிகமானதாயமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கமைய, முதன்மைப் பணவீக்கமானது நடுத்தர காலத்தில் பொருத்தமான கொள்கை வழிமுறைகளினால் ஆதரவளிக்கப்பட்டு இலக்கிடப்பட்ட 5 சதவீத மட்டத்தினை நோக்கி ஒருமுகப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**முதன்மைப் பணவீக்க எறிவுகள்**

**கொ.நு.வி.சுட்டெண்* (காலாண்டு சராசரி, ஆண்டிற்காண்டு, சதவீதம்)**




***குறிப்பு**: வீச்சு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 2022 கா4 வரையான உண்மையான தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2013=100, பருவகால ரீதியில் சீராக்கப்பட்ட) அடிப்படையிலமைந்துள்ள வேளையில் இக்காலப் பகுதிக்குப் பின்னரான தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100, பருவகால ரீதியில் சீராக்கப்பட்ட) அடிப்படையிலமைந்துள்ளன. எறிவுகள் கிடைப்பனவாகவுள்ள சகல தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளன.

*மூலம்: மத்திய வங்கியின் அலுவலர் எறிவுகள்*

*வீச்சு வரைபடமானது படிப்படியாக மங்கலடைகின்ற நிறங்களுடைய நம்பிக்கை இடைவெளிகளைப் பயன்படுத்தி அடிப்படை எறிவுப்பாதையைச் சூழ்ந்துள்ள நிச்சயமற்றதன்மையத் தெளிவுபடுத்துகின்றது. வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள நம்பிக்கை இடைவெளிகள் நடுத்தர காலத்தில் பணவீக்கம் தளம்பலடையக்கூடிய பெறுமதிகளுக்குள்ளான வீச்சுகளை எடுத்துக்காட்டுகின்றது. உதாரணமாக, தடிப்பான பச்சை நிறப்படுத்தப்பட்ட பகுதியானது 50 சதவீத நம்பிக்கை இடைவெளிகளை எடுத்துக்காட்டி உண்மையான பணவீக்க விளைவு இவ்விடைவெளிகளினுள் அமையப்பெறும் என்ற 50 சதவீத நிகழ்தகவினை உணர்த்துகின்றது. நம்பிக்கை இடைவெளி நீண்ட காலத்தில் பணவீக்கத்தின் எதிர்வுகூறலின் அதிகரிக்கின்ற நிச்சயமின்மையினைக் காட்டுகின்றது.*

**குறிப்பு: எதிர்வுகூறல் என்பது வாக்குறுதியோ அன்றில் கடப்பாடோ அல்ல.**

2023 நவெம்பர் மாத எதிர்வுகூறல் சுற்றில் கிடைக்கப்பெறுகின்ற தரவுகள், மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் தீர்மானங்களை எறிவுகள் பிரதிபலிக்கின்றன. உலகளாவிய வலு மற்றும் உணவு விலைகள், இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் படிப்படியான வளர்ச்சி மீட்சி, படுகடன் மறுசீரமைப்புச் சூழ்நிலையின் கீழான பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி எறிவுகளுடன் இசைந்து

செல்லும் விதமாக எதிர்பார்க்கப்படுகின்ற உள்நாட்டு இறைப் பாதை மற்றும் 2024இற்கான அரசாங்க வரவு செலவுத்திட்ட உரையில் முன்மொழியப்பட்ட முக்கிய மாற்றங்கள், ஐக்கிய அமெரிக்காவின் நாணயக்கொள்கை நிலையினால் குறித்துக்காட்டப்படுகின்ற உலகளாவிய நிதியியல் நிலைப்பாடுகள் போன்ற எதிர்வுகூறல்களின் மீதான நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும். மேலும், எறிவுகள் மாதிரியுருவிற்கு ஒத்திசைவான வட்டி வீத பாதை மற்றும் தோற்றம்பெறுகின்ற பேரண்டப்பொருளாதார பதிலிறுப்புக்கள் என்பன மீதான நிபந்தனைகளுக்குட்பட்டவையாகும். இவ்வூகங்களில் காணப்படும் ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றம் எறிவுசெய்யப்பட்ட பாதையிலிருந்து உண்மையான பணவீக்கப் பாதை விலகுவதற்கு வழிவகுக்கக்கூடும்.

தற்போதுள்ள உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதார நிச்சயமின்மைகள், பாதகமான வானிலை நிலைமைகள் மற்றும் புவிசார் அரசியல் பதற்றங்கள் என்பவற்றைக் கருத்திற் கொள்கையில், தற்போதைய எறிவுடன் இணையப்பெற்ற இடர்நேர்வுகள் சாதாரண காலங்களைக் காட்டிலும் ஒப்பீட்டளவில் உயர்வானதாகும். எறிவுகளில் வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ ஏற்கனவே உட்புறப்படுத்தப்பட்ட மட்டங்களிலிருந்து விலகுகின்ற பல்வேறு காரணிகளின் சாத்தியத்தன்மையின் காரணமாக இவ்விடர்நேர்வுகள் தோற்றம்பெறுகின்றன. குறிப்பாக, உட்புறப்படுத்தப்பட்ட மட்டங்களுக்கு விஞ்சியளவிலான அதிகரித்துச்செல்கின்ற உலகளாவிய பண்ட விலைகளினால் உந்தப்பட்டு உள்நாட்டு விலைகளுக்கான சாத்தியமான மேல்நோக்கிய திருத்தங்கள், அதிகரித்த வரிகளுக்கான சாத்தியப்பாடு மற்றும் தொடர்புடைய இரண்டாம் சுற்றுத் தாக்கங்கள், சாத்தியமான கூலி உயர்வுகள், வலு விலைகளில் பாரியளவிலான அதிகரிப்புக்கள், தளர்த்தப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க பாரியளவிலான ஏதேனும் செலாவணி வீத பெறுமானத் தேய்மானம், வேளாண்மை உற்பத்தி மீதான சாத்தியமான பாதகமான வானிலையின் தாக்கம் மற்றும் அதன்மூலம் ஏற்படக்கூடிய உணவுப் பணவீக்கம் போன்ற காரணிகளிலிருந்து தோற்றம்பெறுகின்ற பணவீக்க எறிவுகளிற்கான மேல்நோக்கிய இடர்நேர்வுகள் காணப்படுகின்றன. அதேவேளை, நிரம்பல் நிலைமைகளின் விரைவான மீட்சிக்கான சாத்தியப்பாடு மற்றும் பொதுமக்களின் குறைவடைந்து செல்கின்ற கொள்வனவு சக்தியின் தொடர்ச்சியான தாக்கம் என்பவற்றினை பணவீக்க எறிவுகளிற்கான கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் உள்ளடக்கின்றன.

பணவீக்கத் தோற்றப்பாட்டிற்கான ஏதேனும் மாற்றங்கள் பற்றி கிரமமானதோர் அடிப்படையில் பொது மக்களுக்குத் தொடர்பூட்டி தகவலறிந்த தீர்மானங்களை எடுப்பதற்கு அவர்களை இயலச் செய்வதற்கு மத்திய வங்கி அர்ப்பணிப்புடனுள்ளது.

சந்தை வட்டி வீதங்கள் எதிர்வருகின்ற காலப்பகுதியில் இயல்புநிலைக்குத் திரும்புமென எதிர்பார்க்கப்படுகின்றது. சந்தை வட்டி வீதங்கள் தொடர்ந்தும் கீழ்நோக்கிச் சீராக்கப்பட்டதுடன் அநேகமான அடிப்படை வட்டி வீதங்கள் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்துள்ளன. அதேவேளை, வீழ்ச்சியடைகின்ற இடர்நேர்வு மிகையுடன் அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்களும் கீழ்நோக்கிச் சீராக்கப்படுகின்றன. இந்நாணயக்கொள்கை மீளாய்வில் 100 அடிப்படைப் புள்ளிகளினால் கொள்கை வட்டி வீதங்களின் குறைப்பானது சந்தை வட்டி வீதங்கள் எதிர்வருகின்ற காலப்பகுதியில் கீழ்நோக்கிச் சீராக்கப்படுவதற்கும் இயல்புநிலைக்குத் திரும்புவதற்குமான மேலதிக இடைவெளியினை உருவாக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. தளர்த்தப்பட்ட நாணயக்கொள்கை நிலையின் ஊடுகடத்தலினைப் பிரதிபலித்து, வங்கித்தொழில் துறையின் மூலமான தனியார் துறைக்கான வெளிநின்ற கொடுகடன் செத்தெம்பரில் மாதாந்த அடிப்படையிலும் தற்காலிகமான தரவுகளின் அடிப்படையில் 2023 ஒத்தோபரிலும் விரிவாக்கப்பட்டது. சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்களின் மிதமடைதலுடன் தனியார் துறைக்கான கொடுகடன் எதிர்வருகின்ற காலப்பகுதியில் மேலும் அதிகரித்து, அதன்மூலம் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளின் எதிர்பார்க்கப்படுகின்ற மீளெழுச்சிக்கு ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**நடுத்தர காலத்தில் உறுதியான பணவீக்கத் தோற்றப்பாடு மற்றும் மெதுவடைந்த கேள்வி அழுத்தங்கள் என்பவற்றினைக் கருத்திற்கொண்டு கொள்கை வட்டி வீதங்கள் மேலும் குறைக்கப்பட்டுள்ளன**

மேலே எடுத்துக்காட்டப்பட்ட தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டு, இலங்கை மத்திய வங்கியின் நாணயக்கொள்கைச் சபையானது 2023 நவெம்பர் 23ஆம் நாளன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 9.00 சதவீதத்திற்கும் 10.00 சதவீதத்திற்கும் 100 அடிப்படைப் புள்ளிகளினால் குறைப்பதற்குத் தீர்மானித்தது. கொள்கை வட்டி வீதங்களின் இக்குறைவுடன் கிடைப்பனவாகவுள்ள தகவல்களின் அடிப்படையில், தற்போதைய மற்றும் கடந்த கால நாணயக்கொள்கை தளர்வடைதல் வழிமுறைகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் சந்தை வட்டி வீதங்கள் கீழ்நோக்கிச் சீராக்கப்படுவதற்கான இடைவெளியினைக் கருத்திற்கொண்டு மேலதிக நாணயக்கொள்கைத் தளர்வடைதல் குறுங்காலத்தில் இடைநிறுத்தப்படுமென சபை கருதியது. 2023 யூனிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நாணயக்கொள்கைத் தளர்வடைதல் வழிமுறைகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் ஒட்டுமொத்த சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்களில் விரைவான,

கணிசமானளவிலான மற்றும் பரந்த அடிப்படையிலான குறைவொன்றினை சபை எதிர்பார்க்கின்றது. உள்நாட்டு நாணய நிலைமைகள் மேலும் தளர்த்தப்படுவதற்கு வட்டி வீதங்களில் இத்தகைய சீராக்கம் இன்றியமையாததொன்றாகும். நாணயக்கொள்கைத் தளர்வடைதல் வழிமுறைத் தொடர்களின் நலன்கள் வியாபாரங்களுக்கும் குடியிருப்பாளர்களுக்கும் போதியளவில் ஊடுகடத்தப்படுவதனை நிச்சயப்படுத்தும் பொருட்டு சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்கள் குறைக்கப்படுவதற்கான விரைவான வழிமுறைகளை சகல உரிமம்பெற்ற வங்கிகளும் மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தினை சபை வலியுறுத்தியது.

நாணயக்கொள்கைச் சபையானது ஏனையவற்றிற்கிடையில் பணவீக்க எறிவுகளிற்கான இடர்நேர்வுகளைத் தொடர்ந்தும் மதிப்பீடு செய்து, எதிர்வருகின்ற காலப்பகுதியில் உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கான பொருத்தமான வழிமுறைகளை மேற்கொள்ளும் வேளையில் பொருளாதாரம் அதன் உள்ளார்ந்த ஆற்றல்வாய்ந்த தன்மையினை அடைவதற்கு ஆதரவளிக்கத் தயாராகவிருக்கும்.

| | | |
|---|---|---|
| **நாணயக் கொள்கைத் தீர்மானம்** | **கொள்கை வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டன** | |
| | துணைநில் வைப்பு வசதி வீதம் | 9.00% |
| | துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 10.00% |
| | நியதி ஒதுக்கு விகிதம்<br>(*தொடர்ந்தும் மாற்றமின்றிக் காணப்படுகின்றது*) | 2.00% |

**தகவல் குறிப்பு:**

ஆளுநர் முனைவர் பி. நந்தலால் வீரசிங்க அவர்களின் தலைமையிலான ஊடக மாநாடு இலங்கை மத்திய வங்கியின் கேட்போர்கூடத்தில் 2023 நவெம்பர் 24ஆம் திகதி மு.ப 11.30 மணிக்கு நடைபெறுவதுடன் முகநூல் மற்றும் யு ரியூப் என்பவற்றின் வாயிலாக நேரலையாக இடம்பெறும்.

நாணயக் கொள்கை மீளாய்வு மீதான அடுத்த கிரமமான அறிக்கை வெளியீடு உரிய காலத்தில் அறிவிக்கப்படும்.

**இணைப்பு I**

## அட்டவணை 01: பணவீக்கம்

| மாதம் | | சன 23 | பெப் 23 | மாச் 23 | ஏப் 23 | மே 23 | யூன் 23 | யூலை 23 | ஓகத் 23 | செத் 23 | ஒத் 23 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முதன்மைப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு (2021=100) | 51.7 | 50.6 | 50.3 | 35.3 | 25.2 | 12.0 | 6.3 | 4.0 | 1.3 | 1.5 |
| | தேநுவிசு (2021=100) | 53.2 | 53.6 | 49.2 | 33.6 | 22.1 | 10.8 | 4.6 | 2.1 | 0.8 | 1.0 |
| மையப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு (2021=100) | 45.6 | 43.6 | 39.1 | 27.8 | 20.3 | 9.8 | 5.9 | 4.6 | 1.9 | 1.2 |
| | தேநுவிசு (2021=100) | 52.0 | 50.1 | 44.2 | 31.8 | 21.6 | 11.3 | 6.3 | 4.1 | 1.7 | 0.6 |

*மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்*

## அட்டவணை 02: நாணயத்துறை அபிவிருத்திகள் (தற்காலிகமானவை)

| குறிகாட்டி | வெளிநின்ற தொகை (ரூ.பில்லியன்) (அ) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சன 23 | பெப் 23 | மாச் 23 | ஏப் 23 | மே 23 | யூன் 23 | யூலை 23 | ஓகத் 23 | செத் 23 |
| ஒதுக்குப் பணம் | 1,590 | 1,505 | 1,424 | 1,417 | 1,559 | 1,436 | 1,374 | 1,407 | 1,244 |
| விரிந்த பணம் ($M_{2b}$) | 12,322 | 12,346 | 12,293 | 12,387 | 12,307 | 12,517 | 12,726 | 12,698 | 12,806 |
| தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | (1,573) | (1,434) | (1,174) | (1,039) | (838) | (808) | (707) | (612) | (560) |
| தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 13,895 | 13,780 | 13,467 | 13,426 | 13,144 | 13,325 | 13,433 | 13,309 | 13,366 |
| அரசிற்கான தேறிய கொடுகடன் | 7,612 | 7,471 | 7,568 | 8,091(ஆ) | 8,111 | 8,261 | 8,549 | 8,465 | 8,204 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான/ அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில் முயற்சிகளுக்கான கொடுகடன் | 1,748 | 1,712 | 1,605 | 1,147(ஆ) | 1,084 | 1,096 | 1,097 | 1,091 | 1,099 |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 7,318 | 7,260 | 7,141 | 7,093 | 7,004 | 7,080 | 7,093 | 7,098 | 7,168 |
| விரிந்த பணம் ($M_4$) | 14,891 | 14,906 | 14,868 | 14,981 | 14,885 | 15,093 | 15,335 | 15,330 | 15,446 |

(அ) 2022 மாச்சிலிருந்து ஆரம்பமாகின்ற காலப்பகுதியில் செலாவணி வீதத்தில் ஏற்பட்ட மாற்றங்களிலிருந்து எழுந்த மதிப்பீட்டு மாற்றங்கள் நாணய மற்றும் கொடுகடன் கூட்டுக்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கு வழிவகுத்துள்ளன.

(ஆ) 2023 சனவரி 30 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பெறப்பட்ட அமைச்சரவை ஒப்புதலுடன், அரசிற்குச் சொந்தமான தேர்ந்தெடுக்கப்பட்ட வியாபாரத் தொழில்முயற்சிகளின் ஐந்தொகைகளை மீள்கட்டமைப்பதற்குப் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழ் உடன்பட்ட நடவடிக்கைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளிநின்ற வெளிநாட்டு நாணய உத்தரவாதமளிக்கப்பட்ட படுகடனானது 2022 திசெம்பரிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மத்திய அரச படுகடனினுள் உள்ளீர்க்கப்பட்டது. இதற்கமைய, இச்சீராக்கத்தின் ஒரு பகுதி 2023 ஏப்பிறலில் நிறைவேற்றப்பட்டதுடன் அரசிற்குச் சொந்தமான குறித்த வர்த்தக வங்கியின் ஐந்தொகையில் இது பிரதிபலிக்கப்பட்டது. மேலும், இது அரச கூட்டுத்தாபனங்கள்/அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளிற்கான கொடுகடனில் குறைப்பொன்றினையும் அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனில் விரிவாக்கமொன்றினையும் தோற்றுவித்தது.

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

## அட்டவணை 03: வட்டி வீதங்கள்

| வட்டி வீதம் (%) | மே 23 முடிவில் | யூன் 23 முடிவில் | யூலை 23 முடிவில் | ஓகத் 23 முடிவில் | செத் 23 முடிவில் | ஒத் 23 முடிவில் | 23 நவெ 2023இல் உள்ளவாறாக |
|---|---|---|---|---|---|---|---|
| **மத்திய வங்கியின் முக்கிய கொள்கை வட்டி வீதங்கள்** | | | | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 15.50 | 13.00 | 11.00 | 11.00 | 11.00 | 10.00 | 10.00 |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 16.50 | 14.00 | 12.00 | 12.00 | 12.00 | 11.00 | 11.00 |
| **சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம்** | 16.50 | 13.85 | 11.50 | 11.50 | 11.66 | 10.29 | 10.25 |
| **திறைசேரி உண்டியல் விளைவு வீதங்கள் (முதலாந்தரச் சந்தை)** | | | | | | | |
| 91-நாள் | 25.65 | 23.00 | 19.96 | 18.48 | 17.42 | 16.10 | 15.29 (அ) |
| 182-நாள் | 25.29 | 19.49 | 17.69 | 15.36 | 15.13 | 14.93 | 14.75 (அ) |
| 364-நாள் | 22.91 | 16.99 | 14.29 | 13.58 | 13.30 | 13.02 | 12.94 (அ) |
| **கடன்வழங்கல் வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் (வாராந்தம்) | 20.29 | 19.47 | 17.18 | 15.29 | 14.67 | 13.88 | 13.14 (ஆ) |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் | 17.75 | 17.51 | 16.90 | 16.20 | 15.62 | 15.18 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம் | 22.39 | 21.51 | 19.30 | 17.89 | 16.57 | 15.98 | - |
| **வைப்பு வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 15.23 | 15.09 | 14.76 | 14.15 | 13.39 | 12.75 | 12.11 |
| சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 19.84 | 19.70 | 19.02 | 18.26 | 17.24 | 16.34 | 15.54 |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 18.85 | 14.98 | 12.45 | 11.46 | 11.47 | 11.51 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நிலையான வைப்பு வீதம் | 19.19 | 15.49 | 12.76 | 11.81 | 11.82 | 11.78 | - |

*(அ) 2023 நவெம்பர் 22 அன்று நடைபெற்ற ஏல வீதம்*

*(ஆ) 2023 நவெம்பர் 17இல் முடிவடைகின்ற வாரத்திற்கானது*

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*